# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| R.ராமகிருஷ்ணன் | S.ராஜசேகர் | S.நந்தகோபால் |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி : 8.4.2019.

பதிவுத்தபால் அஞ்சல் ஒப்புகையுடன்

பெறுநர்:-

போக்குவரத்து ஆணையர் அவர்கள்
போக்குவரத்து துறை
சேப்பாக்கம்,
சென்னை-5

ஐயா,

பொருள்:- வட்டார போக்குவரத்து அலுவலர் கடித எண் : ந.க.எண்: 3987-உ2.2019 நாள்: 01.2019

மேற்படி கடிதத்தில் வாகன புகை சோதனை இயந்திரங்கள் “வாகன்” இணைய தளத்தில் இணைக்கப்பட வேண்டும் என்றும் 01.04.2019 லிருந்து இது நடை முறைக்கு வரவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்கள் 1998ல் இருந்து நிறுவப்பட்டு வாகன புகைச்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றது.

புகைப் பரிசோதணை கட்டணம் எங்களுக்கு Go. MS. No.674 Home Transport(V) dt: 03.06.1998ன் படி கீழ்கண்ட படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வாகன விபரம் | கட்டணம் |
|---|---|
| இரண்டு சக்கர மோட்டார் சைக்கிள், மூன்று சக்கர ஆட்டோ | 30.00 |
| இலகுரக வாகனம் (நான்கு சக்கர வாகனம்) | 50.00 |
| மத்திய வாகனம் சரக்கு, மற்றும் பயனிகள் வாகனம் | 100.00 |
| கனரக மோட்டார், சரக்கு வாகனம் பயனியர் வாகனம் | |

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி :

தற்பொழுது எங்களது மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்கள் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படியும் அதன் அடிப்படையில் மத்திய மாநில அரசின் உத்திரவுகளின் படி நாங்கள் செயல்பட தயாராக உள்ளோம். ஆனால் செயல்படத் தொடங்குமுன் தங்களுடைய மேலான பார்வைக்கு எங்களுக்கு நேரும் கீழ்கண்ட இடர்பாடுகளை தங்களிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

1. “வாகன்” இணையதளத்துடன் இணைப்பதற்கு தற்பொழுது உள்ள இயந்திரங்களை மாற்றுவதற்கு சமாராக இரண்டு லட்சம் ரூபாய் வரை செலவாகின்றது.
2. “வாகன்” இணையதளத்தில் செயல்படுத்துவதற்கு கூடுதலாக இரண்டு பணியாட்களை நியமிக்க வேண்டும். அதிவேகதிறன் கொண்ட இணைய வசதிகள் இணைப்பும் முழுநேரம் தேவைப்படுகின்றது. அதற்கும் கூடுதலாக செலவழிக்க வேண்டியுள்ளது.

மேற்படி செலவினங்களை தற்போது மேற்கொள்வதற்கு 20 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளது.

ஆகவே இந்நிலையில் வாகன புகை சோதனை கட்டணங்களை மறுபரிசீலணை செய்து உயர்த்தித்தர வேண்டிய அவசியமாகவும், நியாய மாகவும் உள்ளது.

01.04.2019 முதல் என்ற காலக்கொடு மிகவும் குறுகிய காலகெடுவாக இருப்பதால் மோட்டார் வாகன புகை பரிசோதனை உரிமையாளர்கள் உடனடியாக புதிய இயந்திரங்களை வாங்குவதற்கு பொருளீட்ட இயலாமல் உள்ளது.

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி :

ஆகவே அருள் கூர்ந்து வணக்கத்துக்குரிய போக்குவரத்து ஆணையர் அவர்கள் 01.04.2019 என்ற காலக்கெடுவை ஆறு மாத காலத்துக்கு நீட்டித்து தரும்படியும், அதற்கிடையில் புகைப் பரிசோதனை கட்டணத்தை தற்பொழுது உள்ள கட்டணத்திலிருந்து மூன்று மடங்கு உயர்த்தி உத்திரவு பிறப்பிக்கும் படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சிறுதொழிலை நம்பி 1500 குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் இருப்பதை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

நாள்:- 08.03.2019

தலைவர்

நகல்:

1) முதன்மைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை.
2) உள்துறை செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம்,, சென்னை.